...ஜனநாயகம்

...ிய - லெனினிய
...ல் ஏடு

...காமாண்டு

16

15 ஜூலை '89

உள்நாடு

இதழ் : ரூ.1.50
...சந்தா : ரூ.36

...வெளிநாடுகள்
...ான அஞ்சலில்)
...சந்தா : U S $. 11

...புகள் அனுப்பவும்

...ந்துத் தொடர்புக்கும்

...தியழகன்
...ர், 'புதிய ஜனநாயகம்'
...லாஜிசிங் தெரு
...ப்பேட்டை
...-600 015.

# இந்திய இராணுவம் வெளியேற வேண்டும், இல்லையானால் இந்துமா கடலில் வீசிஎறியப்படும்!

**எமதருமை தேசத்து சகோதரர்களே,**

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று நாம் கோருகிறோம். இல்லையானால் துரத்தியடிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். நமது சொந்த நாட்டு இராணுவத்துக்கு இப்படி நேர வேண்டும் என்று கோருவதும் விரும்புவதும் எவ்வளவு துரதிருஷ்டமானது! இருந்த போதும் நமக்கு வேறு வழியில்லை. அவ்வாறே முடிவு செய்துள்ளோம். ஏனெனில் அவர்கள் இன்னொரு தேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டுத் தரகு அதிகார முதலாளிகளுக்குச் சந்தை பிடித்துக் கொடுப்பதற்காக, இந்த நாட்ட பாசிச ஆளும் கும்பலின் விரிவாக்க - பிராந்திய ஆதிக்க நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அநியாயமான போரிலே ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்கள்.

இந்திய இராணுவத்தினர் பிறப்பால் நமது நாட்டுச் சகோதரர்கள் தான்! இருந்த போதும் அவர்களுக்குப் பெருமளவு உயிர் சேதமும் இழப்புகளும் நேர்ந்து, தோற்றுத் துரத்தியடிக்கப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இதுவும் எவ்வளவு வேதனைக்குரியது. அவ்வாறு எண்ணுவதைத் தவிர நமக்கு வேறுவழியில்லை. ஏனெனில் அவர்கள் இங்கிருந்து இராட்டைகளை எடுத்துக் கொண்டுபோய் 'காந்திய' வழியிலே பிரார்த்தனைகள் செய்துகொண்டு நூல் நூற்றுக்கொண்டிருக்கவில்லை. இயந்திரத் துப்பாக்கிகளையும், பீரங்கி-கவச வண்டிகளையும் எடுத்துக் கொண்டுபோய் இன்னொரு தேசத்து தமிழ் மக்களைப் படுகொலை செய்து கொண்டிருக்கிறார்கள், சகோதரர்களே! அவர்கள் சகலவிதமான மனித உரிமைகளையும் தமது கனத்த ''பூட்சு'' கால்களால் ஏறி மிதித்து நசுக்குகிறார்கள்; மனிதப் பண்பாடுகளுக்கு அப்பாற்பட்டு மிருகத்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்பதற்கான சான்றுகள் ஏராளமாக உள்ளன. அவர்கள் இன்னொரு தேசத்து இளைஞர்களைப் பிடித்துப்போய் பலாத்காரமான முறையில் ஓரின உடலுறவு கொள்ளுகிறார்கள். சித்தரவதைகள் செய்து படுகொலைகள் புரிகிறார்கள். பயபீதியை உருவாக்குவதற்காகப் பிணங்களை வீதிகளிலே விசிறியடிக்கிறார்கள். அவர்கள் இன்னொரு தேசத்து தாய்மார்களையும் சகோதரிகளையும் இழுத்துப்போய் கற்பழித்துக் கொல்லுகிறார்கள்.

இவையெல்லாம் நமக்கும் நமது நாட்டுக்கும் எவ்வளவு பெரிய அவமானம்! இன்று இவற்றைச் சகித்துக் கொள்ளுவோம் அல்லது கண்டுகொள்ளாது இருந்துவிடுவோமானால், நாளை நமக்கும் நமது சகோதர சகோதரிகளுக்கும் இவை நேரலாம். இப்போதே பஞ்சாப், காஷ்மீர் மற்றும் வடகிழக்கிந்திய மக்களுக்கு எதிராக இத்தகைய அக்கிரமங்கள் - அட்டூழியங்களில் இந்திய இராணுவமும் போலீசும் ஈடுபட்டிருக்கின்றன!

**எமதருமை தேசத்து சகோதரர்களே,**

பாரிய முறையிலே சிந்தித்துப் பாருங்கள்! இலங்கை - ஈழப்பிரச்சினை, அதிலே இந்தியத் தலையீடு ஆகியவற்றின் நியாய, அநியாயங்களை எண்ணிப் பாருங்கள். 1983 இனக் கலவரத்தைத் தொடர்ந்து ஈழப்போராளி அமைப்புகளின் முதுகிலேறிக் கொண்டு, தனது இராணுவ பலத்தை வைத்து இலங்கை அரசை மிரட்டி அரசியல். பொருளாதார, இராணுவ ரீதியில் இந்தியாவுக்குச் சாதகமான, சமனற்ற ஒப்பந்தத்தை இலங்கை மீது திணித்தது. இவற்றுக்குப் பிரதிபலனாக ஈழ சுயநிர்ணய உரிமையைப் பலியிடுவது; ஈழப்போராளிகளை நிராயுதபாணிகளாக்கி, இந்தியாவிலுள்ள இராணுவப் பயிற்சி முகாம்களில் இருந்து விரட்டுவது; ஈழத்தில் தனது அடிவருவடிகளின் பொம்மை அரசை நிறுவுவது; இதற்காக இந்திய இராணுவத்தைப் பயன்படுத்துவதோடு, சிங்கள இராணுவத்துக்கும் பயிற்சியளிப்பது என்று தானே முடிவு செய்து இலங்கை அரசுடன் ஒப்பந்தம் போட்டது பாசிச ராஜீவ் கும்பல். இந்த ஈழத்துரோக ஒப்பந்தத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும்படி 'வீட்டுக்காவலி'ல் வைத்து ஈழப்போராளிகளை மிரட்டியது. விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்துவிட்டனர்; 'ஈரோஸ்' நிபந்தனைகளுடனும், மற்றவை அப்படியேயும் ஏற்றுக் கொண்டன. 100 கோடி ரூபாய் 'நிவாரணம்' அதிகாரத்தில் பெரும்பங்கு ஆகிய பேரங்களைப் புலிகளுடன் நடத்தியது. பேரங்கள் தோற்றுப்போய் ஈழ ஆக்கிரமிப்புப் போரைத் துவக்கி நடத்துகிறது.

ஈழத்தில் இந்திய இராணுவத்தை வைத்து மோசடியான தேர்தல்களை நடத்தித் தனது அடிவருடிகளின் பொம்மை அரசை நிறுவி, ஈழத்தமிழர்களை வைத்தே ஈழத்தமிழர்களைக் கொல்லும் சதியை அமுலாக்கி வருகிறது. அதேசமயம் புலிகளுடனான முடிவற்ற போரில் பேரிழப்புகளை சந்திக்கிறது. ஈழவிடுதலைப் போர், இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கடி முற்றி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்ற சிங்கள தீவிரவாத அமைப்புக்கெதிராக ஏறக்குறைய உள்நாட்டுப் போரில் சிக்கிக் கொண்டது இலங்கை அரசு. இலங்கையின் சிங்கள, தமிழ் (முஸ்லீம்) மூஇன மக்கள் பிளவுபட்டு இனக்கலவரங்களில் ஈடுபட்டுவந்தபோதும் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற வேண்டும் என்று இப்போது ஏகமனதாகக் கொதித்துக் கோருகின்றனர்.

''வடக்கு - கிழக்கு மாகாண அரசுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது; ஈழத்தமிழர்களுக்குப் போதுமான பாதுகாப்பளிக்கும் தனிப்படையை அமைப்பது; இந்தியாவின் நலன்களை உறுதி செய்வது - ஆகியன நிறைவேறாதவரை இந்திய இராணுவம் வெளியேறாது'' என்று பாசிச ராஜீவ் கும்பல் அடம்பிடிக்கிறது. முன்பு இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கப் படையெடுத்ததாகக் கூறியவர்கள் இப்போது தனி ஈழத்தை ஆதரிக்கிறார்களாம்! ''புலிகளை ஒழித்துவிட்டோம்; இராணுவப் பணிகள் ஏறக்குறைய முடிந்துவிட்டன'' என்று நேற்றுவரை சொன்னவர்கள், இன்று இந்திய இராணுவத்தின் கடமைகள் முடியவில்லை என்கிறார்கள். ஈழத்துரோகிகளையும், சிங்கள அடிவருடிகளையும் வைத்து இலங்கை ஆக்கிரமிப்புக்கு நியாயம் கற்பிக்கின்றனர். தனது கூலிப்பிரச்சாரகர்களையும் வைத்து இந்தியாவிலே கூப்பாடு போடுகின்றனர். **எமதருமை தேசத்து சகோதரர்களே,**

இன்று இன்னொரு தேசத்தை ஆக்கிரமிப்பதை ஆதரிப்பவர்கள்ள, நாளை இந்தியாவைவிடப் பலம் வாய்ந்த வல்லரசு இந்தியாவை ஆக்கிரமிப்பதையும் ஆதரிப்பார்கள். இன்னொரு தேசத்தை ஆக்கிரமித்து அடிமைப்படுத்துவதை சகித்துக் கொள்பவர்கள் தானும் சுதந்திரமாக வாழ முடியாது! பழைய, புதிய ஜார்களுக்கும், பிரிட்டிஷ் காலனியப் பேரரசுக்கும், அமெரிக்க வல்லரசுக்கும் நேர்ந்த கதியை நினைத்துப் பார்க்க மறுக்கிறது, பாசிச ராஜீவ் கும்பல். ஆதிக்கவெறியினால் அழிவுப்பாதையில் அமுந்தி நிற்கிறது. சொந்த நாட்டு மக்களையே அடக்கி ஒடுக்கி, சூறையாடும் ஆளும் கும்பல், அண்டை நாடுகளிடம் மட்டும் வேறு வித்தியாசமாக நடந்து கொள்ளாது. இப்படிப்பட்ட அநீதியான ஆக்கிரமிப்பையும் போரையும் சகித்துக் கொள்ளுவதுகூட சரியல்ல. ஆகவே, இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும் அல்லது இந்துமாகடலில் தூக்கி எறியப்பட வேண்டும் என்று எண்ணுவதுதான் உண்மையான தேசப்பற்று! அதற்காக சமரசமின்றிப் போராடுவோம்.